1975 மார்ச் 5]

திரு. தொ. ப. சீனிவாசன் : வட ஆற்காடு மாவட்டத்தில் ஜவ்வாது மலையில் சந்தன மரக் காடுகள் அதிகமாக இருக்கின்றன. தூக்க மரங்களும் பயிரிட வாய்ப்பு இருக்கிறது. அங்கு தூக்க மரங்களை வளர்க்க சிறப்புத் திட்டம் அமல்படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தூக்க மரங்களை எந்த எந்த இடங்களில் வளர்ப்பது என்பது திட்டத்தை நிறைவேற்றும்போது பரிசீலிக்கப் படும்.

விரைவுப் பேருந்துகளில் கம்பியில்லாச் செய்திக் கருவிகள்

* 199 வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசினால் நடத்தப்படும் நெடுந்தூர எக்ஸ்பிரஸ் பஸ்களில் வயர்லெஸ் கருவிகள் வைக்க அரசிடம் செயற்குறிப்பு யாதேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) ஏதாவது ஒரு பகுதியில் ஓடும் விரைவுப் பேருந்துகளில் எடுத்துக் காட்டாக, சென்னைக்கும் திருச்சிராப்பள்ளிக்கும் அல்லது சென்னைக்கும் மதுரைக்குமிடையே ஓடும் விரைவுப் பேருந்துகளில் கம்பியில்லாச் செய்திக் கருவிகளைப் பொருத்துவது என்றும் இதனைச் சோதனை ஏற்பாடாகக் கொண்டு, பின்னர், மாநிலத்திலுள்ள பிற பகுதிகளுக்கும் நீட்டிப்பது என்றும் கருதப்பட்டுள்ளது.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : இந்தத் திட்டம் எப்போது நிறைவேற்றப் படும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இது சம்பந்தமாக ஏற்கெனவே கர்நாடக மாநிலம் பெங்களூரில் உள்ள பாரத் எலக்ட்ரானிக்ஸ் என்ற நிறுவனத்தோடு பேச்சு வார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : ஒரு பஸ்ஸில் ஒயர்லெஸ் செட் வைக்க எவ்வளவு செலவாகும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அத்தகைய விவரங்கள் இனிமேல் முடிவு செய்யப்பட வேண்டிய ஒன்று.

திரு. கே. டி. கே. தங்கமணி : நெடுந்தூரம் செல்லக்கூடிய எக்ஸ்பிரஸ் பஸ்கள் பிரேக் டவுன் ஆனவுடன் உடனடியாக தகவல் சொல்லி பாசஞ்சர்களை வேறு ஒரு பஸ்ஸில் ஏற்றிக்கொண்டு செல்ல என்ன ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அதற்காகத்தான் இந்த ஒயர்லெஸ் கம்யூனிகேஷனை நாம் தமிழகத்தின் விரைவுப் பேருந்துகளில் பொருத்துவது பற்றிய திட்டத்தை மேற்கொண்டிருக்கிறோம்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் புதிய பேருந்து வழித்தடங்கள்.

* 200. **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் புதிய பஸ் ரூட்டுகளை எந்தெந்தப் பகுதிகளில் துவங்க அரசு ஆலோசித்துள்ளது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தஞ்சை மாவட்டத்தில் 94 புதிய பேருந்து வழித்தடங்களைத் துவங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதிகளின் விபரம் :—

(1) தஞ்சாவூர் பஸ் நிலையத்திலிருந்து சவுராப்பட்டி, திருமானூர், கோட்டைத்தெரு, மீலட்டூர், கணபதி அக்ரகாரம், சேதுராயன் குடிக்காடு.

(2) கும்பகோணம் பஸ் நிலையத்திலிருந்து திருப்பனந்தாள், ஐயம் பேட்டை, திருவைகாவூர், ஆடுதுறை, நிலதநல்லூர்.

(3) மன்னார்குடி பஸ் நிலையத்திலிருந்து திருப்பத்தூர், பெருகவளந் தான், கருவக்குறிச்சி, புல்லவராயன் குடிக்காடு.

(4) சீர்காழியிலிருந்து சிதம்பரம், மாயவரம், ஆக்கூர், புதுப்பட்டினம், காவிரிப்பூம்பட்டினம்.

(5) மாயவரத்திலிருந்து விருத்தாசலம், சிதம்பரம்.

(6) மாயவரம் பஸ் நிலையத்திலிருந்து குத்தாலம், மணல்மேடு போன்ற இடங்களுக்கும்.

(முற்பகல் 10-00)

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்த புதிய பஸ் ரூட்டுகள் எந்த அடிப்படையில் துவங்கப்படுகிறது என்பதை அறிவிக்க இயலுமா ? அதைப் போலவே தஞ்சை மாவட்டத்தில் பல முக்கிய கிராமங்களின்

TRUTH ALONE TRIUMPHS